# இருபா இருபஃது காட்டும் அவத்தைகளின் நிலை

## The State of Suffering as Depicted in Irupa Irupathu

**க.சுபலா**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பதிவு எண்: 23PHTMF002

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641043, இந்தியா.

**Subala. K**. Research Scholar of Tamil, Reg.No. 23PHTMF002,
Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, TamilNadu - 641 043, India.
ORC I'd - https://orcid.org/0009-0006-1510-7945

**முனைவர் ம.கீதா.**ஆய்வு நெறியாளர், உதவிப்பேராசிரியர்(SS), தமிழ்த்துறை,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641043, இந்தியா.

**Dr.Geetha.M**. Assistant Professor (SS), Department of Tamil,
Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, TamilNadu - 641 043, India.
ORC I'd - https://orcid.org/0000-0001-5310-7774

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் முதன்மையும் முழுமையும் வாய்ந்து விளங்கி வருவது சைவ சமயம் . சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகப் போற்றப்படுபவன் பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் ஆவான் . இச்சமயத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும் சைவ சித்தாந்தம் என்றழைக்கப்படுகிறது . சிந்துவெளி நாகரிகத்திற்கும் முற்பட்ட சைவ சமயம் , அநாதி பொருளாகக் கால எல்லைகளைக் கடந்து நிற்கின்றது . சித்தாந்த சைவசெந்நெறி என்று போற்றப்படும் இதன் தத்துவங்களைப் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்கள் விளக்குகின்றது . அப்பதினான்கு நூல்களுள் மெய்கண்ட தேவ நாயனாரின் மாணவரான அருணந்தி சிவாச்சாரியார் அருளிய இருபா இருபஃது நூல் சித்தாந்த நுண்பொருளைத் திறம்பட ஆராய்ந்து உணர்த்துவதைக் காணமுடிகின்றது . சைவ சித்தாந்தம் பதி , பசு, பாசம் என்ற மூன்று உண்மை பொருள்களை ஆராய்கின்றது . பதியான இறைவனிடத்தில் ஆன்மாக்கள் சென்றடைதலே வீடுபேறு எனப்படும் . பாசத்தளைகளால் கட்டுண்ட பசுக்கள் அதனை விடுத்து இறைவனை அடைவதற்கு அவத்தைகள் உதவுகின்றன . கேவல நிலையிலிருக்கும் உயிரானது ஐந்து அவத்தைகளின் தொழிற்படுதல் காரணமாக வீடுபேற்று நிலையினை அடைகின்றது . அவ் அவத்தைகள் ஐந்தும் உயிர்களிடம் தொழிற்படுதலைப் பற்றி ஆராயமுற்படுகின்றது இக்கட்டுரை . '*இருபா இருபஃது காட்டும் அவத்தைகளின் நிலை* ' என்னும் தலைப்பிலான இக்கட்டுரை 'முன்னுரை, இருபா இருபஃது , முப்பொருள் உண்மை , உயிர்க்காட்சி, ஐந்து



© 2026, IRJTSR 

அவத்தைகள், உயிரியல்புகள் ஆகிய துணைத்தலைப்புகளின் கீழ் ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவாக முடிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

*இருபா இருபஃது*- அவத்தை - பேருறக்கம் - உயிர்ப்படங்கல் - ஆன்ம இயல்பு.

**முன்னுரை**

உயிர்களுக்குத் தத்தம் உணர்வினை உணர்த்தும் சமயங்கள் பலவற்றுள் ஒப்புயர்வற்ற சமயமாக விளங்குவது சைவ சமயம் ஆகும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும்இறைவனை அடைவதற்குரிய கொள்கைகளாகக் கருதப்படுவது சைவ சித்தாந்த தத்துவங்களாகும். சைவ சித்தாந்தத் தத்துவங்கள் முடிந்த முடிபு எனப்படும் பதி, பசு, பாசம் ஆகிய மூன்று உண்மை பொருட்கள் குறித்தும் அவற்றின் இலக்கணத்தையும் கூறுகின்றது. பசுவான உயிர்ப் பாசத்தை நீங்கி பதியை அடைவதற்குரிய சாதனத்தையும் அதனால் ஏற்படும் பயனையும் விளக்கி கூறுகின்றது. உயிர் இந்நிலையினை அடைவதற்குரிய நெறியினை ஆராய்ந்து எடுத்துரைப்பதே கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**இருபா இருபஃது**

பெருங்கருணை வடிவான இறைவன் உயிர்களுக்கு மெய்ப்பொருள் தன்மைகளை உணர்த்துபவனாக விளங்குகிறான். உண்மை இலக்கணத்தையும் சித்தாந்த தத்துவத்தையும் சாத்திர நூல்கள் விளக்குகின்றது. அவற்றைப் பற்றி,

**"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்**
**பிந்திருபா உண்மை பிரகாசம் வந்த அருட்**
**பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு**
**உண்மைநெறி சங்கற்பம் உற்று". (சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம், ப.1)**

என்று வரும் பழம்பாடல் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இந்நூல்கள் உலகிற் பிறந்த உயிர்களுக்கு சிவஞானப்பேறு எனப்படும் வீடுபேற்று நெறியினை அளிக்கவல்லதாக கருதப்படுகின்றது. சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கு மூல நூலாக விளங்கும் சிவஞானபோதத்தினை அருளிய மெய்கண்ட தேவ நாயனாரின் முதன்மை மாணவரான திருத்துறையூர் அருணந்தி சிவாச்சாரியார் அருளிய இருபா இருபஃது நூல் பத்துத் திருவெண்பாக்களையும் பத்து திருவாசிரியங்களையும் கொண்டதாகும். இவரின் காலம் பதிமூன்றாம் நூற்றாண்டு எனக் குறிப்பிடப்படுகிறது. சிவஞான போதத்திற்கு விளக்கவுரை எழுதிய இவர் பத்து மெய்கண்ட சாத்திர நூல்களை அருளிச் செய்துள்ளார்.

இந்நூல் ஆன்மாக்கள் பாசத்தளைகளை விடுத்து பதியான இறைவனை அடைவதற்குரிய நெறிகளையும் அதன் இலக்கணத்தையும் உயிர்க்காட்சி மற்றும் முப்பொருள்களின் இயல்புகள் குறித்தும் வினா விடை பகுதிகளாக எடுத்துரைக்கின்றது. மேலும், இந்நூலில் இடம்பெற்றுள்ள வினாக்கள் அனைத்தும் அறிவியல் சார்ந்ததாகவும் நுண்ணிய சித்தாந்த கருத்துக்களைக் கொண்டதாகவும் மெய்ப்பொருளை உணர்த்துவதாகவும் இருப்பதைக் காணமுடிகின்றது. மெய்கண்டாரின் சிவஞானபோதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட வழிநூலென இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR

**முப்பொருள் உண்மை**

ஆகமங்களும் வேதங்களும் சிவபெருமான் வழியாகவே தோன்றின என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகக் கூறப்படுகின்றது. உலகின் முடிந்த உண்மை பொருள்களைக் கண்டுணர்ந்து அதன் முடிநிலையினை ஆராய்ந்து கூறுவது சைவ சித்தாந்தத்தின் கொள்கையாகக் கருதப்படுகின்றது. இதன் உள்பொருளாகிய பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் அநாதி காலந்தொட்டு உலகில் நிலைத்திருக்கின்றன.

பதி - இறைவன் - மெய்ப்பொருள் - சத்து

பசு - ஆன்மா - உயிர் - சதசத்து

பாசம் - மும்மலம் - வினை - அசத்து.

பசு பாசத்தால் பந்திக்கப்பட்டது. உயிர் சிற்றறிவுடைய பொருள் என்பதால் பாசத்தளைகளை விடுத்து பதிஞானத்தினால் வினை நீக்கம் பெற்று இறைவனை அடைகின்றது இதுவே வீடுபேறு எனப்படும்.

**உயிர்க்காட்சி**

ஆன்மாவான உயிர்ப் பிறக்கும் பொழுது கேவல நிலையில் இருக்கிறது. அதன் பின்னர், உயிர்ச் சார்ந்ததன் வண்ணமாதலின் பொருட்டு கேவல நிலையிலிருந்து சகல நிலைக்கு முன்னேறி, சுத்தநிலையினை அடைகின்றது. சங்கரகாரணனாகிய பெருமான் ஆன்மாக்களுக்குத் தலைவரானவன். உயிரானது நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்னும் ஐவகையான அவத்தைகளுக்குட்பட்டு வருகின்றது. அவத்தை என்பதற்கு சைவ சித்தாந்த அகராதி,

**"அவத்தை - பொருள் : நிலை அல்லது பாடு.**

**நிகழ்மூலம் - உயிர், உள்ளம், ஆன்மா.**

**நிகழிடம் -இலாடம், கண்டம், இதயம், நாபி, மூலாதாரம்.**

**செயற்கருவிகள் - 35". ( சைவ சித்தாந்த அகராதி, ப.22)**

என்று பொருள் தருகின்றது. மேலும், செயற்கருவிகள் 35மற்றும் அதன் பாகுபாடுகளையும் விவரித்து காட்டுகின்றது.உயிர் இயல்பாகவே அறிவுடைய பொருள், ஆணவ மலப் பற்றினால் அது நிலையான சத்துப் பொருள் என்பதை உணரும் தன்மையற்றதாக நிற்கின்றது. ஆணவமலப் பற்று குறித்து ,**"ஆணவத்தைப் பற்றி இருக்கும் வேளை என்பது கேவல நிலையில் இருந்து சகல நிலை வந்து நிற்கின்ற வேளை. அப்போது அது உண்மை பொருளை அறிவதில்லை. அது அறிவில்லாத பொருளாகிய ஆணவ மலத்தைத் தனது இயலாமை காரணமாகப் பற்றி நிற்கின்றது. அதனால் அதன் குணங்களால் உயிரானது அறியாமையை அடைகின்றது. உண்மை எது பொய் எது எனப் பகுத்துணரும் அறிவு இன்றி அறிவு மயக்கம் கொண்டு நிற்கின்றது. ஆணவம் சடப் பொருள். அதன் காரியமாக வருவதும் சடமே. எனவே அறியாமைப் பொருளாகிய ஆணவத்தால் விளைவதும் அறியாமையே, அஃதாவது சடப் பொருளால் அறியும் அறிவும் சடமே. இன்னும் சொல்லப் போனால் அசித்தாகிய ஆணவத்தின் சார்பினால் உயிர் அடையும் அறிவும் அறியாமை ஆகிய அசித்தே ஆகும்."(இருபா இருபஃது, ப.49)**என்று வரும் கூற்றின் மூலம் உயிரின் சார்ந்ததாம் வண்ணம் தன்மையினை உணரமுடிகின்றது.


© 2026, IRJTSR

நிலையான பொருள் என்பதால் இறைவன் சத்துப் பொருளானவன் . ஞானமற்றதாக விளங்கும் சடப்பொருளான மும்மலம் அசத்துப் பொருளாக விளங்குகின்றது . சத்தோடு அழுந்தி நிற்கும் காலத்தே சத்தாயும் அசத்தோடு நிற்கும் காலத்தில் அசத்தாயும் நிற்கின்றது. உயிர் இவ்விருத்தன்மைகளையும் உடையது . அதன் காரணமாக சதசத்து என்றழைக்கப்படுகிறது. பதியின் ஞானத்தால் அது அசத்துப் பொருள்களை விடுத்து சத்துப் பொருளுடன் நின்று முத்தி நிலையினை எய்துகின்றது. இதனை,

**"அறிவு அறியாமை இரண்டும் அடியேன்**
**செறிதலான் மெய்கண்ட தேவே - அறிவோ**
**அறியேனோ யாதுஎன்று கூறுகேன் ஆய்ந்து**
**குறிமாறு கொள்ளாமற் கூறு." (இருபா.பா.3)**

எனவரும் வெண்பா மூலம் உயிர் அடையும் இருத்தன்மை பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. இதே கருத்தினை,

**"இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா" (சிவஞான.சூத். 7)**

என்னும் சிவஞானபோதச் சூத்திரத் தொடரின் வழியாக உணர்த்தப்பெறுகின்றது.

உயிர்ப் பெத்த நிலையிலிருக்கும் பொழுது தனு , கரண, புவன போகங்களை நுகர்வதற்கு அதனுள் அழுந்தி நிற்கின்றது . அவ்வசத்துப் பொருளினால் உயிர் அறியாமை வயப்பட்டு அசத்துப் பொருளாகி நிற்கின்றது . சத்துப் பொருளான இறைவனைப் பற்றி நிற்கும் காலத்தில் முத்தி நிலையினை அடைந்து சத்தாகிய திருவருளால் சிவத்தில் அழுந்தி நிற்பதைக் காணமுடிகின்றது . இதுவே உயிர் ஐந்து அவத்தைகளுக்கு உட்படுதல் என்று சித்தாந்தக் கோட்பாடுகள் குறிப்பிடுகின்றது.

**ஐந்து அவத்தைகள்**

உயிர் தனது அறிவினை அனுபவ வாயிலாக பெறுதல் வேண்டும் என்பதற்காகவே ஆணவமல வயப்படுவதை இறைவன் தடுக்கவில்லை . உயிர்க்கு ஆணவமலம் அறியாமையாகிய அஞ்ஞானத்தை விளைவிக்கின்றது . அதனை நீக்கும் பொருட்டே இறைவன் மாயையிலிருந்து தனு , கரண, புவன போகங்களை படைத்து உயிர்களைப் பிறவிக்குட்படுத்துகின்றான் என்பதைக் காணமுடிகின்றது . அவத்தைகள் என்பது தொழிற்பாடு . உயிரின் தொழிற்பாடு . அவத்தைகள் காரண அவத்தை , காரிய அவத்தை என இரு வகைப்படும் . காரண அவத்தை மூன்றும் காரிய அவத்தை ஐந்தும் என எட்டு அவத்தைகளுக்கு உயிர் உட்பட்டு நிற்கும் தன்மையினை உடையதாகும் . காரண அவத்தை மூன்றினுள் 'கேவலம், சகலம், சுத்தம் ஆகிய மூன்றுமடங்கும் . அவற்றுள், கேவலாவத்தை ஆன்மா ஆணவ மலப்பற்றினோடு உள்ள நிலையாகும் . இது குறித்து,

**"கேவல சகல சுத்தம்**
**என்றுமூன் றவத்தை ஆன்மா**
**மேவுவன்; கேவலம் தன்னுண்மை;**
**மெய் பொறிகள் எல்லாம்**
**காவலன் கொடுத்த போது**
**சகலனாம்; மலங்கள் எல்லாம்**
**ஓவின போது சுக்கம்**
**உடையன் உற்பவம் துடைத்தே."(சிவஞானசித்தி.சூ.4 அதி.3,6)**



© 2026, IRJTSR 

என்று வரும் சூத்திரம் உணர்த்துவதைக் காணமுடிகின்றது .உயிர் கேவல நிலையில் ஆணவ மல பற்றுக்குட்பட்டு நிற்கும் . இவ்வேளையில் அது நுகரும் தன்மையினை அடைவதால் தொழிற்பட தொடங்குகிறது. இச்செய்தினை,

**"மொழிந்த அவத்தை முதல்அடியேன் நின்றாங்கு**
**ஒழிந்தன நான்கும் உணர - இழிந்தறிந்து**
**ஏறிற்றிங்கு இல்லைஎழில் வெண்ணெய் மெய்த்தேவே**
**தேறிற்றுஎன் கொண்டு தெரிந்து." (இருபா இருபஃது, பா.7)**

என்று வரும் வெண்பாவின் வாயிலாக உயிர்த்தொழிற்பாடு அடையும் நிலை பற்றி அறியமுடிகின்றது. சகல நிலையே ஆன்மா பிறப்பு இறப்புகளுக்கு உட்பட்டு உழலும் நிலை என்றும் சுத்த நிலை ஆன்மா பிறவிப்பிணியை நீங்கி முத்தியினை பெற்ற நிலை என்றும் குறிப்பிடுகின்றார்.

இத்தொழிற்பட தொடங்குதல் என்பது உயிர் நனவு , கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்து அவத்தைகளுக்கு உள்ளாகுவதைக் குறிக்கின்றது.உயிர் நனவு நிலையில் 35கருவிகளுடன் கூடித் தொழிற்படுகின்றன . அவையாவன,

**நனவு நிலை - சாக்கிரம்**

ஞானேந்திரியம் - ஐம்பொறி - 5
கன்மேந்திரியம் - தொழிற்பொறி - 5
தன்மாத்திரைகள் - ஐம்புலன் - 5
தொழிற்புலன் - 5
வாயுக்கள் - வளி - 10
அந்தக் காரணங்கள் - அகக்கருவி - 4
புருடன் - தத்துவம் - 1
ஆக - **35**

**கனவு நிலை - சொப்பனம்**

தன்மாத்திரைகள் - ஐம்புலன் - 5
தொழிற்புலன் - 5
வாயுக்கள் - வளி - 10
அந்தக் காரணங்கள் - அகக்கருவி - 4
புருடன் - தத்துவம் - 1
ஆக - **25**

கனவு நிலையை உயிர் அடைந்து அவத்தையுறும் பொழுது ஐம்பொறியும் தொழில்பொறியும் நீங்கி விடுகின்றன.

**உறக்க நிலை - சுழுத்தி**

சித்தம் - 1
பிராணன் - 1
புருடன் - 1
ஆக - **3**

உயிர் நனவு நிலையிலிருந்து உறக்க நிலைக்கு வரும் பொழுது மூன்று தத்துவங்களை ஏற்கின்றது.

**பேருறக்க நிலை - துரியம்**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2026, IRJTSR

பிராணன் - 1

புருடன் - 1

என **இரண்டு** கருவிகளில் தொழிற்பட்டு சித்தம் என்கிற கருவியை நீக்கி விடுகின்றது.

**உயிர்ப்படங்கல் நிலை - துரியாதீதம்**

புருடன் - **1**

பேருறக்க நிலையிலிருக்கும் உயிர் பிராணன் என்னும் கருவியை நீங்கி புருடன் என்னும் தத்துவத்தில் தொழிற்படுவதைக் காணமுடிகின்றது .இந்த ஐந்து அவத்தைகளையும்காணல், கருதல் அளவையாலும் உணர்வுகளாலும் அறியமுடிகின்றது.இதனை,

**"அந்தக் கரணம் அவற்றின் ஒன்று**
**அன்றுஅவை சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது**
**அமைச்சு அரசு ஏய்ப்பநின்று அஞ்சு அவத்தைத்தே."(சிவஞான.சூத்.4)**

எனவரும் சூத்திரம் உணர்த்துவதன் வழியாக சாக்கிரம் முதலிய ஐந்தும் கேவலம் , சகலம், சுத்தம் என முத்திறப்பட்டும் , உண்மையில் சகலத்தில் நிகழ்வனவேயாதல் விளங்கும் என்பதைக் காணமுடிகின்றது . இந்நிலைக் குறித்து ,**"தத்துவம் முப்பத்தாறாவன இவை என்பதில் ஐயமில்லை . அவை மேலே இரண்டாம் நூற்பா இரண்டாம் அதிகரணத்து உரையில் காட்டப்பட்டன . ஆயினும், 'தாத்துவிகம் அறுபது' என்பது ஒருபடித்தாக அன்றிப் பலவாகக் கொள்ளப் படுதலும் அவ்விடத்தே குறிக்கப்பட்டது. அஃது எவ்வாறாயினும், ஞானேந்திரிய விடயங்கள் ஐந்து, கன்மேந்திரிய விடயங்கள் ஐந்து , பிராணாதி வாயுக்கள் பத்து ஆக இருபதொழித்து ஏனை நாற்பது தாத்துவிகங்களும் சகலத்தில் நிகழும் சாக்கிரத்திற்றானே நின்றொழியும் ' என்பது இவ்வெண்பாவிற் கூறிய கருவித் தொகைகளால் விளங்கும் ."(சிவஞானபோதத் திருநெறியுரை , ப. 437)**என்று வரும் கூற்றின் மூலம் தத்துவங்கள் 36 என்றும் அதன் தொழிற்படும் இடம் குறித்தும் சுட்டிக்காட்டுவது ஒப்புநோக்கத்தக்கதாக அமைகின்றது.

**உயிர்க்காட்சியும் அதன் இயல்புகளும்**

இறைவன் தன்னைச் சார்ந்திருக்கும் உயிர்களுக்கு அவர் அகத்தே சென்று உள்நின்று ஞானம் புகட்டி அவரை நல்வழிப்படுத்தி வீடுபேற்று நெறியினை காட்டவல்லான் என்பதை,

**"மதி நுதல் பாக னாகிக் கதிதர" (இருபா இருபஃது, பா.6:1)**

என்று வரும் பாடலடியின் மூலம் பதிஞானத்தினை அறிவிக்கும் பொருட்டு இறைவனின் பெருங்கருணை இயல்பினை அறியமுடிகின்றது.

இறைவன் அறிவை புகட்டி அவன் தரும் ஞானத்தின் வழியாக நின்று உயிர் தன்னையும் தன் இயல்பினையும் அறிந்து , அதன் அளவற்ற பேரியல்பினைக் கண்டுகொள்கின்றது. இஞ்ஞானம் என்றுமே அழியாத ஞானமாக உயிர்களுக்கு விளங்குகின்றது.உயிர் தத்தம் பக்குவ நிலைக்கேற்பவும் மாறிப் பிறக்கின்றது . இதனை,

**"செங்கோனாடவிப் பல்லுயிர்க்குஞ் செய்வினை மெய்தெரிய"**
**(திரு.1.63:பா.4)**


© 2026, IRJTSR

என்று வரும் பதிக அடியில் திருஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிடுகின்றார் .பசுக்கள் எண்ணற்றவை என்பது குறித்து,

**"பிறந்தநாள் போலும் பிறக்கும் நாள் போலும்**
**துறந்தோர் துறப்போர் தொகை" (திருவருட்பயன்.11)**

என்ற அடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

உயிர் சத்துப் பொருளினையும் அசத்துப் பொருளினையும் தனித்து அறியப்படுவதன்று. இவ்விரண்டினையும் போல அறியும் வழியால் அறிவதால் அது சார்ந்ததன் வண்ணமாம் தன்மையினை உடையதாக கருதப்படுகின்றது .பதியான இறைவன் கருவிகளைக் கொண்டு எதையும் அறியாமல் அவனது திருக்குறிப்பால் எல்லாவற்றையும் அறியும் தன்மையுடையவன் அதன் காரணமாகவே அவன் தன்வயமுடையவன் ஆகிறான் . உயிரின் நிலை இந்நிலையிலிருந்து வேறுபடுவதை, **"ஐம்பொறிகளால் அறிந்த அறிவு கலங்கி அறியும் அறிவு . இவ்வறிவு கலங்கி நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கள் என ஐந்து அவத்தைகளை உயிர் அடைகின்றது . அவத்தை என்பது தொழிற்பாடு . ஒரு அவத்தையில் நின்று அது நிகழும்போது உயிர் அந்த அவத்தையை விட்டு இன்னொரு அவத்தையை அடைகின்றது. ஓர் அவத்தையை விட்டு நீங்கி வேறோர் அவத்தை நிலைக்கு ஆளாகின்றது . எனவே, உயிரின் நிலை உடலோடு கூடி ஐந்தவத்தைப் படுகின்ற நிலைதான் உயிரின் உண்மை இயல்பு." (இருபா இருபஃது, ப.96)**என்று கூறுவதன் வழியாக உயிரின் நிலை உடலோடு கூடி ஐந்தவத்தைப் படுகின்ற நிலைதான் உயிரின் உண்மை இயல்பு என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். இவ்வாறு கருவி வழியாக அறிந்த அறிவு அவத்தைகளுக்குட்பட்டு அதனை நீங்கி மீண்டும் இறத்தல் பிறத்தல் என்னும் நிலையினை எட்டுவதைக் காணமுடிகின்றது . இதனைதான், போக்குவரவுபுரிய என்று மெய்கண்ட தேவ நாயனார் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

ஒரு சமயத்தின் நன்னெறிகளும் அதன்கண் ஏற்படும் நல்வினை பயனையும் கொண்டே அச்சமயத்தின் கொள்கைகளை அறிந்துகொள்ளஇயலும் . உலகில் நிலவும் சமயங்களில் பழம்பெருஞ் சமயமாகக் கருதப்படுவது சைவ சமயமாகும் . இச்சமயம் பேரொளிப் பிழம்பாக விளங்கும் சிவபெருமானை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடப்படுகின்றது. இச்சமயத்தின் தத்துவ உண்மைகள் சைவ சித்தாந்தம் என்று கூறப்படுகிறது. சைவ சித்தாந்த சாத்திரங்கள் முப்பொருள் உண்மையினை உணர்த்தி பசுக்களை நல்வழிப்படுத்துகின்றது . சித்தாந்த சாத்திர நூல்கள் மூன்று உண்மை பொருள்களின் பொது இயல்பினையும் சிறப்பியலபினையும் விரித்துக்காட்டி எது உண்மை பொருள் என்பதை உலகிற்கு சுட்டிக்காட்டுகின்றது . உயிர்ப் பிறக்கும் பொழுதே ஆணவ மலத்தினால் கட்டுண்டு கிடக்கிறது . இதனை, ஆன்மாக் குற்றம் என்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர் . ஆணவ மலத்திற்குட்பட்டு வினைகளை புரியும் உயிர் அவ்வினைகளின் நுகர வேண்டியதாகின்றது . பெத்த நிலையில் உயிர் பாசத்தளைகளோடு அத்துவிதமாய் நிற்பது போல , பதி ஞானத்தினால் சுத்த நிலையினை அடைந்த பின்னர் பாசத்தினை நீங்கி இறைவனோடு அத்துவிதமாய்

நிற்கும். இந்நிலையே வீடுபேறு என இக்கட்டுரை எடுத்துரைத்ததன் வழியாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

[1] அருணை வடிவேலு முதலியார் , சி. *சிவஞானபோதத் திருநெறியுரை* . பேரூரதீன வெளியீடு , கோயம்புத்தூர் - 641 010, மூன்றாம்பதிப்பு - 2015.

[2] காஞ்சி நாகலிங்க முதலியார் (உ.ஆ). *மெய்கண்ட சாத்திரம் மூலமும் உரையும்* . திருவாவடுதுறை ஆதீனம், மயிலாடுதுறை - 609 803, முதற் பதிப்பு - 1897.

[3] சுப்புரெட்டியார், ந. *சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்* . திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை - 600 018, முதற் பதிப்பு - 2001.

[4] தருமை ஆதீனம் (ப.குழு). *பன்னிரு திருமுறைகள் (முழுவதும்)*, தருமை ஆதீனம், ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை - 609001, முதற் பதிப்பு - 2023.

[5] பொன்னையா.ஆ.(உ.ஆ). *இருபா இருபஃது (பொருளுரையும் விரிவுரையும்).* திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை - 600 018, முதற் பதிப்பு - 2003.

[6] மூர்த்தி, அ.கி. *சைவ சித்தாந்த அகராதி.*தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 018, முதற் பதிப்பு - 1998.